**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**

முன்னிலை : **செல்வி V. பார்கவி, B.A.B.L.,L.L.M.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி

-------

2021-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 07-ம் நாள் வியாழக்கிழமை
திருவள்ளுவராண்டு 2052, பிலவ வருடம் புரட்டாசி மாதம் 21-ம்நாள்

------

**அசல் வழக்கு எண். 146/2012 -ல் இடைமனு எண். 01/2021**

சபீதா ( இறந்தார் ) ..வாதி

1. ஷாலினி
2. சுரேந்தர் ..1,2 மனுதாரர்கள்/இறந்த வாதியின் வாரிசுகளாக சேர்க்கப்பட வேண்டிய நபர்கள்

..எதிர்...

1. அஞ்சலை
2. மணிகண்டன்
3. மார்கோணி
4. ஸ்ரீசட்டநாத சுவாமி தேவஸ்தானம், சீர்காழி ..எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 30.09.2021 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. ஜி. சரவணன் அவர்களும், 1,2,3-ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு ஆர். கார்த்திக்ராஜன் அவர்களும் ஆஜராகியும், 4-ம் எதிர்மனுதாரரை அழைக்கப்பட்டு ஆஜரின்மையால் தோன்றாத்தரப்பினர் ஆக்கப்பட்டும், இருதரப்பு வாதுரைகளைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள்வரையில் எனது பரிசீலனையில் வைக்கப்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

இறந்த வாதியின் வாரிசுகளாக இம்மனுவின் 1,2 மனுதாரர்களை சேர்க்க உத்தரவிடக்கோரி மனுதாரர்களால் இம்மனு உ.வி.மு.ச. கட்டளை 22 , விதி 3 மற்றும் பிரிவு 151ன் படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனுவின் சுருக்கம்

1,2 மனுதாரர்கள் இறந்த வாதியின் வாரிசுதாரர்கள். அசல் வழக்கு எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக இறந்த வாதி சபீதாவால் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1,2 மனுதாரரின் தாயாரான வாதி இந்த வழக்கு நிலுவையில் இருக்கும்போது

கடந்த 20.05.2021 அன்று இறந்துவிட்டார். 1,2 மனுதாரர்கள் இறந்த வாதியின் வாரிசுகள் ஆவார்கள். எனவே இவ்வழக்கின் வாதி இறந்து விட்ட நிலையில் அவரது வாரிசுகளாக 1,2-மனுதாரர்களை சேர்க்க அனுமதித்து உத்தரவிடக்கோரி மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதிக்க வேண்டும்.

3. 1,2,3 எதிர்மனுதாரர்கள் தரப்பு ஆட்சேபணைக் குறிப்பாணைச் சுருக்கம்

மனு சட்டப்படியும், நியாயப்படியும் நிலைநிற்கத்தக்கதல்ல. மனுவை எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்ய வேண்டும். இறந்த வாதிக்கு மனுதாரர்கள் மட்டுமே வாரிசுகள் என்பதை மனுதாரர்கள் நிரூபிக்க வேண்டும். எனவே இம்மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும்.

4.. இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை

மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதா?

5. இம்மனுவில் மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

6. **தீர்வு**

மனுதாரர் தரப்பில் அசல் வழக்கானது 1,2 மனுதாரர்களின் தாயாரான வாதியால் எதிர்மனுதாராகள்/பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், வழக்கு நிலுவையில் இருக்கும்போது வாதி சபீதா கடந்த 20.05.2021 அன்று இறந்துவிட்டார் என்றும், இறந்த வாதிக்கு மகள் மற்றும் மகனான 1,2 மனுதாரர்கள் மட்டுமே வாரிசுகள் என்றும், எனவே இறந்த வாதியின் வாரிசுகளாக 1,2 மனுதாரர்களை சேர்க்க அனுமதித்து உத்தரவிடக்கோரியுள்ள இம்மனுவை அனுமதிக்க வேண்டுமென்றும் மனுதாரர்கள் தரப்பில் வாதம் செய்யப்பட்டது.

7. 1,2,3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் இறந்த வாதிக்கு 1,2 மனுதாரர்கள் மட்டுமே வாரிசுகள் என்பதை மனுதாரர்களே நிரூபணம் செய்ய வேண்டும் என்றும், மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் வாதம் செய்யப்பட்டது. 4-ம் எதிர்மனுதாரர் இம்மனுவில் ஆஜரின்மையால் தோன்றாத்தரப்பினராக உள்ளார்.

8. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்குக் கோப்புகள் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர்கள் தரப்பில் இறந்த வாதியின் வாரிசுகளாக 1,2 மனுதாரர்களை சேர்க்க அனுமதிக்க வேண்டுமென இம்மனுவில் கோரப்பட்டுள்ளது. 1,2,3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் இறந்த வாதிக்கு 1,2

மனுதாரர்கள் மட்டுமே வாரிசுகள் என்பதை மனுதாரர்களே நிரூபிக்க வேண்டுமென்று ஆட்சேபணை செய்யப்பட்டுள்ளது. இம்மனுவில் 1,2,3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வேறு கடுமையான ஆட்சேபணை எதுவும் செய்யப்படவில்லை. பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள வாக்கில் வாதி சபீதா இறந்துவிட்டநிலையில் 1,2 மனுதாரர்களை அவரது வாரிசுகளாவும் இவ்வழக்கில் 2,3 வாதிகளாகவும் சேர்த்து அதன்பின்னர் வழக்கில் தீர்வு காண்பதே இறுதியான தீர்வாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே இந்நிலையில் அசல் வழக்கிற்கு இறந்த வாதியின் வாரிசுகளான மனுதாரர்கள் தேவையான தரப்பினர்கள் என்பதால் அவர்களை இறந்த வாதியின் வாரிசுகளாக சேர்த்து, அதன்பின்பு அசல் வழக்கில் தீர்வு காண்பதே சரியான தீர்வாக அமையும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

9. மேலும் அது ஒரே பொருண்மையின் அடிப்படையில் பல்வேறு வழக்கு நடவடிக்கைகள் ஏற்படுவதை தவிர்க்க உதவும் (Multiplicity of proceedings) என்பதாலும், இம்மனுவினை அனுமதித்து வழக்கு நடத்துவதே வழக்கு நடவடிக்கைகளில் ஏற்படும் காலதாமதத்தை குறைக்கும் என்று கருதியும் அவ்வாறு 1,2 மனுதாரர்களை இறந்த வாதியின் வாரிசுகளாகவும் இவ்வழக்கில் 2,3 வாதிகளாக தரப்பினர்களாக சேர்ப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படப் போவதில்லை என்றும் இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே இந்நிலையில் இம்மனுவின் 1,2 மனுதாரர்களை இறந்த வாதியின் வாரிசுகளாக சேர்க்கக்கோரியுள்ள இம்மனுவை அனுமதித்து உத்தரவு பிறப்பிப்பதே நீதியின் நலனுக்கு உகந்தது என்று கருதி மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதித்து உத்தரவு பிறப்பிப்பது என்றும், மனுவின் தன்மை கருதி இம்மனுவின் செலவுத்தொகையை இருதரப்பினரும் அவரவர் செலவுத்தொகையை அவரவர்களே ஏற்றுக்கொள்ளவேண்டுமென்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்து அவ்வாறு இம்மனுவின் பிரச்சனைக்கு தீர்வு காண்கிறது.

10. முடிவில், இம்மனுவானது செலவுத்தொகையின்றி அனுமதிக்கப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைதிருத்தம் செய்யப்பட்டு 2021-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 07 -ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில்

அவையறியப் பகரப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி.

<u>பின் இணைப்பு</u>

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> - இல்லை-

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> - இல்லை-

மா.உ.நீ

நேரிய/வரைவு உத்தரவு
அசல் வழக்கு எண். 146/2012-ல்
இடைமனு எண். 01/2021
நாள் -07.10.2021